

Subscribe

# 2 விலங்குகளின் வாழ்க்கை



## 2.1 உயிரினங்கள் தங்கள் குழுவுடன் இணைய வழிகாட்டுக.



... விலங்குகளின் குழு நடத்தை
என்ற பத்தியையும் பக்க எண். 80 இல் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையையும்
படித்து, கீழ்க்காணும் வினாக்களுக்கான விடையை எழுதுக.

அ) குழு நடத்தை என்றால் என்ன?

விலங்குகள் தன் இனத்தைச் சார்ந்த மற்ற விலங்குகளுடன் சேர்ந்து வாழ்வது குழு நடத்தை ஆகும்

ஆ) தேனீக்கள் தங்களது வேலையை எவ்வாறு பகிர்ந்து கொள்கின்றன?

இராணித் தேனீ - முட்டையிடுவது.
வேலைக்காரத் தேனீ - தேன்களை சேகரிப்பது. கூட்டை சுத்தப்படுத்துவது, பாதுகாத்தல்
ஆண் தேனீ - இராணி தேனீ உற்பத்தி செய்த முட்டைகளை கருவுறச் செய்தல்.

இ) யானைகள் கூட்டமாக வாழ்வதால் பெறும் நன்மைகள் யாவை?

கூட்டத்தில் உள்ள மூத்த யானைகள் குட்டிகளுக்குப் பழக்கவழக்கத்தையும் வாழ்க்கைத் திறன்களையும் கற்றுக் கொடுக்கின்றன.

ஈ) பறவைகள் குழுவாக இடம் பெயரும் போது 'V' வடிவத்தில் பறப்பது ஏன்?

(1) முதலில் பறக்கும் பறவை காற்று எதிர்ப்பை குறைக்கிறது. (2) முன்னால் இருக்கும் பறவை வழி காட்டும். (3) ஆற்றலை சேமிக்கும் (4) முன்னிலை பறவை சிறிது நேரத்தில் மாறி வேறு பறவை மாறும்.

உ) காட்டு விலங்குகள் பலத்த ஒலியை எழுப்புவது ஏன்?

தம் இனத்தை எச்சரிக்கவும், ...

**2.4** கொடுக்கப்பட்ட விலங்குகளின் சிறப்புத் தகவமைப்பின் பகுதியை மட்டும் வண்ணம் தீட்டி அவற்றை எடுத்து எழுதுக.


3 வரிகள்

2 அகலமான கால் பாதம்

5 துடுப்புகள்

1 தும்பிக்கை

4 நீண்ட கழுத்து




தும்பிக்கை



அகலமான பாதம்





## 2.5 கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு விலங்குகளின் பெயரைக் கண்டுபிடித்துக் கட்டத்தை நிரப்புக.





குறிப்புகள்:

இடமிருந்து வலமாக →

1. [illegible]






2. அதிர்வுகளை உணர்தல்
உணர் நீட்சியால்
3. வாசனையை
அறிதல்.

2. ............ அதிகம்

3. எதிரொலித்து இடமாக் கல்

**2.8** இரவில் செயல்படும் விலங்குகளை மட்டும் எடுத்து எழுதுக.

பூனை, எலி, அணில், வௌவால்,
ஆடு, மாடு, ஆந்தை, மான்

| | |
|---|---|
| ஆந்தை | பூனை. |
| வௌவால் | எலி. |



2. கீதாவை அவளது அம்மா எவ்வாறு கவனித்துக் கொண்டார்?

(1.) ஆற்றல் தரும் உணவு கொடுத்தார்.

(2) புதிய காலணிகள் வாங்கி கொடுத்தார்.

3. பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள, சமுதாயத்தில் வெற்றிகரமாக வாழ உதவும் பண்புகள் யாவை?

(1) வெற்றி பெற்றவரை பாராட்டுதல்

(2) மன உறுதியுடன் செயல்படுதல்

4. பத்தியிலுள்ள ஆற்றல் தரும் உணவுகளை எடுத்து எழுதுக.

முட்டை, பால், பழம் ஆகியவை

பத்தியிலுள்ள ஆற்றல் தரும் உணவுகளாகும்.

# நானே செய்வேன் – 2

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து நிழலிடுக.

1. சிறிய மீன்கள் ஒன்றாகச் சேர்ந்து இடம்பெயரும் போது பெரிதாகத் தெரிவதால் ஏற்படும் பயன் என்ன?

அ) உணவைப் பெறுதல் ஆ) வேலைப் பகிர்வு

இ) ஆற்றல் சேமிப்பு ஈ) பாதுகாப்பு

2. கண்ணன் மாலை நேரத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் பறவைகள் 'V' வடிவத்தில் வானில் பறப்பதைக் கண்டான். அவை இவ்வாறு பறக்கக் காரணம் என்ன?

அ) வேலையைப் பகிர்வதற்காக ஆ) உணவை எளிதாகப் பெறுவதற்காக

இ) ஆற்றலைச் சேமிப்பதற்காக ஈ) அழகாகத் தெரிவதற்காக

3. ஒரு குழுவில் உள்ள அனைத்து யானைகளும் யாருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகின்றன?

அ) ஆண் யானை ஆ) வயதான யானை

இ) இளம் யானை ஈ) பெண் யானை

4. கோடை காலங்களில் நாய்கள் நாக்கைத் தொங்க விட்டு...

6. தவறான இணையைக் கண்டுபிடி.

அ) மீன் - செவுள்

ஆ) ஒட்டகம் - அகலமான பாதம்

இ) யானை - தும்பிக்கை

ஈ) புலி - காது

7. சந்திரா தனது வீட்டில் சர்க்கரை இருந்த பாத்திரத்தில் எறும்புகள் இருப்பதைக் கண்டாள். எறும்புகள் எவ்வாறு சர்க்கரை இருக்கும் இடத்தை அறிந்தன?

அ) உணர் நீட்சியால் ஆ) சிறந்த பார்வைத் திறனால்

இ) அதிர்வுகளை உணர்ந்ததால் ஈ) சிறந்த கேட்கும் திறனால்

8. மீயொலியை எழுப்பி தன் பாதையில் உள்ள பொருள்களைத் தெரிந்துகொள்ளும் விலங்கு எது?

அ) அந்துப்பூச்சி ஆ) வௌவால்

இ) பூனை ஈ) ஆந்தை

9. வயிற்றுப்பையில் தன் குட்டியைச் சுமந்து செல்லும் விலங்கு

## மாதத் தேர்வு (பிப்ரவரி)

வகுப்பு – 4 | அறிவியல் | நேரம் : 45 நிமிடங்கள்

பெயர் : | மதிப்பெண்கள் : 15

---

**கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

ஒரு தாய் யானை தனது தும்பிக்கையால் இலைகளைப் பறித்துத் தன் குட்டியிடம் கொடுத்தபடி, "நீ எங்கும் செல்லக் கூடாது. இங்கேயே இருக்க வேண்டும்" எனக் கூறியது. ஆனால், அங்கு பறந்து கொண்டிருந்த பட்டாம்பூச்சிகளைப் பின் தொடர்ந்து சென்றது அக்குட்டி யானை.

நீண்ட தொலைவிற்குச் சென்ற பிறகு அக்குட்டியானை தன் தாயினைத் தேடத் தொடங்கியது. அங்கு ஓர் உயரமான மரத்திலுள்ள இலைகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த நீண்ட கழுத்தினையுடைய ஒட்டகச்சிவிங்கியிடம், "என் அம்மாவைப் பார்த்தாயா?" எனக் கேட்டது.

அதற்கு அந்த ஒட்டகச்சிவிங்கி, "நான் உன் அம்மாவைப் பார்க்கவில்லை; அங்கேயுள்ள

2. புலி

3. வரிக்குதிரை.

3. பறவைகள் 'V' வடிவத்தில் பறப்பது ஏன்?

ஆற்றலை சேமிப்பதற்காக பறவைகள் 'V' வடிவில் பறக்கின்றன.

4. ஒட்டகச்சிவிங்கியின் உடலமைப்பில் காணப்படும் சிறப்புத் தகவமைப்பு என்ன? அது எவ்வாறு பயன்படுகிறது?

ஒட்டகச்சிவிங்கியின் நீண்ட கழுத்து உயரமான மரங்களில் உள்ள இலைகளை உண்ண பயன்படுகிறது.

5. கதையில் குழுவாகக் காணப்பட்ட விலங்குகள் எவை?

யானை, மீன்கள், கொக்குகள்